Thalaivaasal

# தலைவாசல்


Thalaivaasal

எங்கள் பாரம்பரியம்

வீடு 01 வாசல் 60 | thalaivaasaltv@gmail.com | புதன்கிழமை | டிசம்பர் 02, 2020


## அனர்த்த கால அவசர சேவை தொலைபேசி இலக்கங்கள்

**யாழ் மாவட்டச் செயலகம்**
*077957894*
*0212117117*
**கரைச்சி பிரதேச சபை**
*தவிசாளர் : 0773812857*
*செயலாளர் : 0775091296*
**பொறுப்பதிகாரி கரைச்சி பிரிவு:** *1094774113574*
**பொறுப்பதிகாரி கண்டாவளை:** *0776735939*
**தீயணைப்பு பிரிவு :** *021-2283333*
**வவுனியா நகரசபை**
*024-2225555*




# மக்கள் அவதானத்துடன் இருங்கள்

## இன்று இரவு 10 மணிக்கு புரெவி கரையைக் கடக்கும்

'புரெவி' சூறாவளி அதிக விளைவுகளை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகின்ற வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கரையோரங்களில் வசிக்கும் மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு இடமாற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

03

## வடக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகளுக்கு விடுமுறை



வடக்கு மாகாணத்திலுள்ள அனைத்து பாடசாலைகளும் நாளை வியாழக்கிழமையும் நாளை மறுநாள் வெள்ளிக் கிழமையும் மூடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வட மாகாண ஆளுநர், திருமதி பி.எம்.எஸ். சார்ள்ஸ் இது குறித்த அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.


சீரற்ற காலநிலை காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட

03

## புரவியை எதிர்கொள்ள முப்படையும் தாயார் நிலையில்

### பாதுகாப்புச் செயலர்



புரவி சூறாவளியினால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை குறைப்பதற்கும், பாதிக்கப்படும் மக்களுக்கு தேவையான உடனடி வசதிகளை செய்து கொடுப்பதற்கும் தேவையான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் கமல் குணரட்ன தெரிவித்தார்.

முப்படையினர் மற்றும் பொலிஸார்

03

## புரவியிலிருந்து பாதுகாக்க அனைத்து ஏற்பாடுகளும் தயார்!

### அமைச்சர் டக்ளஸ்



நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண காலநிலையை எதிர்கொள்வதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

புயல் நாட்டை தாண்டிச் செல்லும் வரை அனைவரையும் பாதுகாப்பான இடங்களில்

03

## பொன்னாலை கடலுக்கு சென்ற மீனவர் மாயம்!

பொன்னாலை கடலில் தொழிலுக்கு சென்றவர் கரை திரும்பாது காணாமல் போயுள்ளார்.

சுழிபுரம் பெரியபுலோவை சேர்ந்த செல்வராசா செல்வக்குமார் (வயது-37) என்ற 4 பிள்ளைகளின் தந்தையே நேற்றிரவு 8 மணியளவில் காணாமல் போயுள்ளார்.

அவரை தேடும் பணியில் , பிரதேச மக்களும், கடற்தொழிலாளர்களும் இணைந்து தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர். கடற்படையினரின் உதவியும் கோரப்பட்டுள்ளது.

## வெடிபொருட்களுடன் கிளிநொச்சியில் பெண்ணொருவர் கைது

கிளிநொச்சி பளை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட இயக்கச்சி பகுதியில் வெடிபொருட்களுடன் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண்ணின் வீடு தற்போது பலத்த சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் கைது தொடர்பான முழுமையான தகவல் எதுவும் வெளியாகவில்லை.

## யாழ் மாநகரசபையின் பாதீடு தோற்கடிப்பு

யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் ஈழமக்கள் ஜனநாயக கட்சி மற்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் எதிர்ப்பால் தோற்கடிக்கப்பட்டது.

2020ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டமும் கடந்த ஆண்டு இரண்டு முறை தோற்கடிக்கப்பட்ட நிலையில் முதல்வர் தனக்கு உள்ள அதிகாரத்தால் அதனை நிறைவேற்றியிருந்தார். எனினும் இந்த ஆண்டு 2021ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை முதல்வர் இம்மானுவேல் ஆனல்ட், 14 நாள்களுக்கு பின்னர் மீளவும் சபையில் சமர்ப்பித்து

03

## வீதியில் உடைத்த நீத்துப் பூசனிக்காய் குடும்பஸ்தர் உயிரைப் பறித்தது

யாழ் வல்லைச் சந்தியில் சமயச்சடங்கிற்காக வீதியில் உடைத்த நீத்துப் பூசணிக்காயில் சறுக்கி விபத்திற்குள்ளான குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

யோகநாதன் ஜெகதீஸ்வரன் (43) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே உயிரிழந்தார்.

கோண்டாவில் மேற்கை சேர்ந்த அவர் கடந்த

03






## தரணி எங்கும் தமிழராய் இணைவோம்

# யாழ்.மக்களை அவதானமாக இருக்க அறிவுறுத்தல்!



கால நிலை சீரின்மையால் யாழ். மாவட்டம் பாதிப்பினை எதிர்கொள்ளும் என எதிர்வு கூறப்ப்படுள்ளமையால் மக்களை அவதானமாக இருக்குமாறு கோரியுள்ள மாவட்ட செயலர் க. மகேசன், கோவிட் -19 நோய் தொடர்பில் மிகவும் அவதானமாக இருக்குமாறும் கோரியுள்ளார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் இன்றைய தினம் ஊடகவியலாளர்களை சந்தித்த போதே அவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்,

வங்காள விரிகுடாவில் மையம் கொண்ட புயல் இலங்கையில் முல்லைத்தீவுக்கும் திருகோணமலைக்கும் இடையில் கடக்கும் என அறிவிக்கப்பட்ட நிலையில் நேற்றைய தினம் யாழ்.மாவட்டத்திற்கும் சிவப்பு எச்சரிக்கை விடப்பட்டிருந்தது.

இந்த புயல் காரணமாக கடும் மழை பொழியும், கடல் கொந்தளிப்பாக காணப்படும் , கடும் காற்று வீசும். இந்த பாதிப்புக்கள் குடா நாட்டிற்கும் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதனால் நாங்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அனர்த்த முகாமைத்துவத்துடன் இணைந்து முன்னெடுத்துள்ளோம்.

கடற்படை , இராணுவம் , பொலிசார் மற்றும் அனர்த்த முகாமைத்துவ உத்தியோகஸ்தர்கள் இணைந்து ஒரு செயற்படுத்துகை குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அவர்கள் 24 மணி நேரம் கடமையில் இருந்து நிலைமைகளை உன்னிப்பாக அவதானித்துக் கொண்டு இருப்பார்கள்.

அனர்த்த முகாமைத்துவ பிரிவினால் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கடந்த 30ஆம் திகதி முதல் மீனவர்களை கடலுக்கு செல்ல வேண்டாம் என அறிவித்துள்ளோம்.

அதேவேளை கடற்தொழிலாளர்கள் தமது படகுகளை பாதுகாப்பாக தரித்து விடுவதற்கான ஏற்பாடுகளை செய்யுமாறும் அறிவுறுத்தி உள்ளோம். அத்துடன் தாழ் நில பகுதிகளில் வசிக்கும் மக்களை தேவை ஏற்படின் அவர்களை அங்கிருந்து பாதுகாப்பாக வெளியேற்றி வேறு இடங்களில் தங்க வைப்பதற்கான ஏற்பாடுகளையும் செய்துள்ளோம். அவ்வாறாக யாழ் .மாவட்டத்தில் 240 மையங்கள் தயார் நிலையில் உள்ளது.

கரையோர மக்கள் விழிப்பாக கால நிலைகளை உன்னிப்பாக அவதானிக்குமாறு அறிவுறுத்தி உள்ளோம். தாழ் நில பகுதிகளில் வசிப்போர் விரும்பின் உறவினர்கள் , நண்பர்கள் வீடுகளுக்கு சென்று தற்காலிகமாக தங்க முடியும். அவ்வாறு தங்க வசதி இல்லாதோர் பொது கட்டடங்களில் தங்க முடியும்.

அதேவேளை இவ்வாறாக பொது இடங்களில் தங்க செல்வோர் தற்போதைய கோவிட் -19 நோய் தொற்று தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும். சுகாதார பிரிவினர் அவை தொடர்பில் கண் காணிப்பார்கள்.

அத்துடன் வீடுகளில் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்கள் வெளியேறும் போது அவர்களுக்கு என ஒதுக்கப்பட்ட இடங்களில் போய் தங்குமாறு கோருகின்றோம். அது அவர்களையும் பாதுகாக்கும் இந்த சமூகத்தையும் பாதுகாக்கும்.

பிரதேச செயலாளர்கள் கிராம சேவையாளர்கள் உள்ளிட்ட கள பணியாளர்கள் பணியில் ஈடுபட்டுள்ளனர். இரண்டு நாட்களும் நாங்கள் மிக அவதானமாக செயற்பட வேண்டும்.

ஆபத்தான மரங்கள் தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும், அதேவேளை மின்சார தடைகள் ஏற்பட்டால் அதனை எதிர்கொள்ள தயாராக இருக்க வேண்டும். அத்துடன் குடிநீர் உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகள் தொடர்பில் மக்கள் கவனம் செலுத்த வேண்டும்.

திடீர் வெள்ள பெருக்கு உள்ளிட்ட வற்றுக்கு முகம் கொடுக்க அனைவரும் தயார் நிலையில் இருக்க வேண்டும்.

ஏனைய மாவட்டங்களை விட யாழ்ப்பாணம் பாதிப்பினை எதிர்கொள்ளும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது இன்றும் நாளையும் 200 மில்லி லீட்டர் மழை பெய்யும் என எதிர்பார்க்க படுகின்றது. நாளை மாலை வரை கால நிலை சீரின்மை இருக்கும். அதனால் மக்கள் இவற்றை கருத்தில் கொண்டு அவதானமாக இருக்க வேண்டும்.

குறிப்பாக கோவிட் -19 நோய் தொற்று தொடர்பில் மிக அவதானமாக இருக்க வேண்டும் என மக்களை கோருகின்றோம் என தெரிவித்தார்.

தலைவாசல் Thalaivaasal எங்கள் பாரம்பரியம்



## தினமொரு ஆரோக்கிய தகவல்

குடும்ப வன்முறைகள் பல சுகாதார சார் பிரச்சனைகளை விளைவிக்கிறது.

காயப்படுதல், உயிரிழப்புக்கள், உளரீதியான பாதிப்புக்கள், குழந்தைகளுக்கான பாதிப்புக்கள் என பல வகையான விளைவுகளைத் தருகிறது.

சரியான புரிந்துணர்வும் பிரச்சனைகளை கையாளும் ஆற்றலும் தம்பதியினரிடையே காணப்படின் பெரும்பாலான விளைவுகளைத் தடுக்கலாம்.

ஆலோசனைகளையும் வழிகாட்டலையும் யாழ் போதனா வைத்தியசாலை, தெல்லிப்பளை, பருத்தித்துறை, ஊர்காவற்துறை மற்றும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைகளிலுள்ள நட்பு நிலையங்களை நாடிப் பெற்றுக்கொள்ளவும்.

**வைத்தியகலாநிதி கோ.றஜீவ்**

# தமிழ் மக்களின் கிராமங்களுக்குள் சிலர் காணிகளை பிடிப்பதாக குற்றச்சாட்டு

மன்னார் இரணை இலுப்பைக்குளம் பூசாரிகுளம் பகுதியில் தமிழ் மக்களின் கிராமங்களுக்குள் சிலர் மக்கள் காணிகளை பிடிப்பதாக தெரிவித்து நேற்று(செவ்வாய்கிழமை) குறித்த பகுதியில் குழுமியிருந்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

குறித்த காணி விடயம் தொடர்பாக வவுனியா நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு வழக்கு விசாரணை நடைபெற்றுவதால் வழக்கு விசாரணை வழக்கு முடிவுறும் வரை முஸ்லிம் மக்களை அத்துமீறி குறித்த பகுதிகளுக்குள் செல்லவேண்டாம் என நீதிமன்றத்தால் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது எனவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

எனினும் நீதிமன்றத்தின் தடையுத்தரவையும் மீறி முஸ்லிம் மக்கள் அத்துமீறி தமிழ் மக்களின் காணிகளை துப்பரவு செய்து தென்னை கன்றுகளை நாட்டியுள்ளதாக மக்கள் தெரிவித்தனர்.

இக்கிராமத்தில் 45 குடும்பங்கள் வசித்து வருவதாகவும் உப குடும்பங்கள் 15 குடும்பங்கள் காணியற்ற நிலையில் வசித்து வரும் நிலையில் இவ்வாறு அத்துமீறி காணிகளை பிடிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் மக்கள் தெரிவித்தனர்.

இந் நிலையில் குறித்த பகுதிக்கு வருகை தந்த கிராம உத்தியோகத்தர் மற்றும் மன்னார் மாவட்ட மடு பொலிஸாரும் அப்பகுதி மக்களுடன் கலந்துரையாடியதன் பின்னர் காட்டுப்பகுதியில் சுமார் 20 ஏக்கர் காணி துப்பரவு செய்யப்பட்டு தென்னங்கன்றுகள் நடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்நிலையில் இரு தரப்பினரையும் இன்று மடு பொலிஸ் நிலையத்திற்கு வருமாறு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# சுகாதார விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரையில் 950 பேர் கைது

சுகாதார விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரையில் 950 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

கடந்த ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் இதுவரையிலான காலப்பகுதிகளிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறிப்பாக கடந்த 24 மணித்தியாலங்களில் மாத்திரம் சுகாதார விதிமுறைகளை கடைப்பிடிக்காது செயற்பட்ட 18 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முகக்கவசம் அணியாமை மற்றும் சமூக இடைவெளியை பேணாமை ஆகிய குற்றச்சாட்டுக்களிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# புதிய அரசியலமைப்பு வரைபு உருவாக்கம்: தமிழ் கட்சிகளால் ஐவர் கொண்ட குழு அமைப்பு!



புதிய அரசியலமைப்பு வரைபை உருவாக்க ஐந்து பேர் கொண்ட குழு, தமிழ் தேசியக் கட்சிகளால் அமைக்கப்பட்டுள்ளது.

புதிய அரசியலமைப்பிற்கான சிபாரிசுகளை இவ்வருடம் டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கும்படி அரசாங்கம் கேட்டுள்ளது. இது குறித்து நேற்று (செவ்வாய்க்கிழமை) தமிழ் கட்சிகள் விவாதித்தன.

இதன்போது, தமிழ் தேசியக் கட்சிகள் சார்பில் சிபாரிசு வரைவொன்றை சமர்ப்பிப்பதென முடிவாகியுள்ளது.

இதேவேளை, கார்த்திகை தீபத் திருநாளில் வடக்கு மாகாணத்தில் இராணுவம் அடாவடியில் ஈடுபட்டமை தொடர்பாக கண்டனம் வெளியிட்டு அரசாங்கத்துக்கு கடிதம் எழுதுவதாகவும் தமிழ் தேசியக் கட்சிகள் தீர்மானித்துள்ளன.

தமிழ் தேசியக் கட்சிகளின் கூட்டம் வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானத்தின் இல்லத்தில் நேற்று மாலை இடம்பெற்றது.

இலங்கை தமிழ் அரசு கட்சி சார்பில் மாவை சேனாதிராசா, சீ.வீ.கே. சிவஞானம், ஈ.சரவணபவன், புளொட் சார்பில் கஜதீபன், தமிழ் மக்கள் கூட்டணி சார்பில் க.அருந்தவபாலன், பேராசிரியர் க.சிவநாதன், ஈ.பி.ஆர். எல்.எவ் சார்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ் தேசியக் கட்சி சார்பில் என்.சிறிகாந்தா, எம்.கே.சிவாஜிலிங்கம், தமிழ் தேசிய பசுமை இயக்கம் சார்பில் பொ.ஐங்கரநேசன், ஈழத்தமிழர் சுயாட்சிக்கழகம் சார்பில் அனந்தி சசிதரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது, கடந்த அரசில் யாப்பு உருவாக்க முயற்சியின் போது, தமிழ் தேசியக் கூட்டமைப்பு சமர்ப்பித்த வரைபு, கடந்த அரசாங்கத்தில் தமிழ் மக்கள் பேரவை சமர்ப்பித்த வரைவு, அத்துடன், வட மாகாண சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட வரைபு ஆகியவற்றின் உள்ளடங்கங்களிலிருந்து மேம்பட்ட புதிய வரைபை உருவாக்குவதென முடிவானது.

இந்த வரைபை உருவாக்க ஐந்து பேர் கொண்ட குழு உருவாக்கப்பட்டது. மாவை சேனாதிராசா தலைமையில் சீ.வீ.கே. சிவஞானம், சுரேஷ் பிரேமச்சந்திரன், எம். கே.சிவாஜிலிங்கம், பேராசிரியர் சிவநாதன் ஆகியோர் யாப்பு வரைபை உருவாக்க குழுவில் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், எதிர்வரும் 10 நாட்களில் இந்தக் குழு வரைபை இறுதி செய்து, தமிழ் தேசியக் கட்சிகளின் தலைமைகளுக்கு சமர்ப்பிப்பதென முடிவாகியுள்ளது. கட்சித் தலைவர்களின் அங்கீகாரத்தின் பின்னர், அந்த வரைபை மாவை சேனாதிராஜா பிரதமரிடம் கையளிப்பார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சி.வி.விக்னேஸ்வரன் தரப்பில் நிபுணர்களை வைத்து ஒரு யாப்பு வரைபை உருவாக்கி வருவதாக, அவரது பிரதிநிதிகளால் தெரிவிக்கப்பட்டது. இந்த வரைபையும் உள்ளடக்கியதாக, புதிய வரைபைத் தயாரிப்பதென முடிவாகியுள்ளது.

# சீரற்ற காலநிலை கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் 10 குடும்பங்கள் பாதிப்பு

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் 10 குடும்பங்களைச் சேர்ந்த 41 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட இடர் முகாமைத்துவ புள்ளி விபரம் தெரிவிக்கின்றது.

இன்று (புதன்கிழமை) பிற்பகல் 3.30 மணிவரை பதிவான தகவலின் அடிப்படையில் இப்புள்ளிவிபரம் தயாரிக்கப்பட்டுள்ளது.

9 வீடுகள் பகுதி அளவில் சேத மடைந்துள்ளதாகவும் குறித்த புள்ளி விபரம் தெரிவிக்கின்றது.

சீரற்ற வானிலை காரணமாக 2 குடும்பங்களை சேர்ந்த 9 பேர் உறவினர் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளதாகவும் அப்புள்ளிவிபரத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# மன்னாரில் காற்றுடன் கூடிய மழை! கிராமங்களில் உட்புகுந்த கடல் நீர்

வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள தாழமுக்கம் காரணமாக மன்னார் மாவட்டத்தின் பல இடங்களில் மழை பெய்து வருவதோடு மன்னார் கடற்பிரதேசங்கள் மிக கொந்தளிப்பாக காணப்படுகிறது.

மன்னாரில் கடற்கரையோர பகுதி களில் ஓரளவு காற்றின் வேகம் அதிகரித்து காணப்படுவதுடன் கடல் மிகவும் கொந்தளிப்பாக காணப்படுகின்றது.

மேலும் மன்னார் விடத்தல் தீவு கிராமத்தில் உள்ள பல வீடுகளில் கடல் நீர் உற்புகுந்துள்ளது.

இதனால் அந்த மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத் துள்ளனர்.

குறிப்பாக இன்று புதன் கிழமை காலை தொடக்கம் மன்னார் மாவட்டத் தில் அதிகரித்த காற்று மற்றும் தொடர்ச்சி யான மழை நீடித்து வருகின்ற நிலையில் மக்கள் வீடுகளில் முடங்கிய நிலையில் உள்ளனர்.

தொடர்சியாக மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதை தவிர்த்துள்ளதுடன் கடலை அண்டிய பகுதிகளில் உள்ள வீடுகளில் கடல் நீர் நுழைத்துள்ளமையையும் அவதானிக்க கூடியதாக உள்ளது.

# புத்தளம் மாவட்ட பாடசாலைகளுக்கும் விடுமுறை

புத்தளம் மாவட்டத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளையும் நாளைய தினம் மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வடமேல் மாகாண ஆளுனர் ராஜா கொல்லுரே தெரிவித்துள்ளார்.

சீரற்ற காலநிலை காரணமாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரையில் சீரற்ற காலநிலை காரணமான கிழக்கு மற்றும் வட மாகாண பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனா அச்சம்: வடக்கு பாடசாலைகளில் மாணவர் வரவு வீழ்ச்சி

கொரோனா வைரஸ் அச்சத்தின் பின்பு பாடசாலைகள் மீள ஆரம்பித்து ஒரு வாரம் கடந்துவிட்ட போதிலும் மாணவர்களின் வரவு வீதம் 60 தாண்டவில்லை எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

கொரோனாத் தாக்கத்தின் பின்பு கடந்த மாதம் 23ஆம் திகதி அன்று பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டபோதும் மாணவர்களின் வரவு நேற்று வரை மிகவும் மந்தமாகவே உள்ளது. இதனடிப்படையில் வடக்கு மாகாணத்துக்கு உட்பட்ட பாடசாலை களில் கடந்த 23ஆம் திகதி 49 வீத மாணவர் வரவு காணப்பட்டது. நேற்று 60 வீதமாகக் காணப்பட்டது.

இதன் காரணமாக கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகள் சீராக முன்கொண்டு செல்லப்படுவதில் தொடர்ந்தும் இடை யூறாகவே உள்ளது எனத் தெரிவிக்கப் படுகின்றது.

இதேவேளை, எதிர்வரும் வாரத்தில் வடக்கு மாகாணத்தில் மாணவர் வரவை அதிகரிக்கக் கல்வி அதிகாரிகள் முயற்சித்து வருகின்றனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## மக்கள் அவதானத்துடன்...

இதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாகாண ஆளுநர்கள், அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபர்களுக்கு அறிவுறுத்தி இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம் சூறாவளியால் ஏற்படக்கூடிய பாதிப்பு களுக்கான நிவாரணங்களை வழங்குவதற்கான நிதி ஒதுக்கங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இன்று இரவு 7 மணிக்கும் 10 மணிக்கும் இடையில் புரெவி சூறாவளி, திருகோணமலைக்கும், பருத்தித் துறைக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் தரைதொட்டு, முல்லைத்தீவு ஊடாக மன்னார் வரையில் செல்லும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, கிழக்கு கடற்பரப்பில் இருந்து தீவுக்குள் பிரவேசிக்கின்ற புரெவி சூறாவளியின் காரணமாக, மின்சார விநியோகத்துக்கு தடங்கல்கள் ஏற்படுமாக இருந்தால், அதனை சீர்செய்வதற்காக பாதிக்கப்படக்கூடிய பகுதிகளுக்கு மேலதிக மின்சார ஊழியர்கள் அனுப்பி வைக்கப் பட்டுள்ளனர்.

எவ்வாறாயினும், கடும் காற்றின் காரணமாக மின்சார கம்பிகள் அறுந்து விழுதல் போன்ற அனர்த்தத்துக்குரிய நிலைமைகள் ஏற்படுமாக இருந்தால், மின்சாரத்தை துண்டிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று, இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், சூறாவளியின் பாதிப்புகளை குறைத் துக் கொள்ளும் வகையில், கிழக்கு மாகாணத்திற்கு பொறுப்பான இராணுவ கட்டளைத் தளபதிக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்தசூறாவளிக்கு முகம் கொடுப்பதற்கு கடற்படையினரும் விசேட வேலைத்திட்டங்களை வகுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலையில் நங்கூரமிட்டிருந்த கடற்படையின் இரண்டு கப்பல்கள், பாதுகாப்பு கருதி ஹம்பாந் தோட்டைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அதேநேரம், இந்த சூறாவளியின் விளைவாக, நாட்டின் பல்வேறு இடங்களிலும் காற்றுடன் கூடிய மழை பெய்து வருகிறது.

இதேவேளை நாட்டின் சில பகுதிகளில் 150 மில்லி மீற்றருக்கும் அதிக மழைவீழ்ச்சி பெய்யக் கூடுமெனவும் வளிமண்டலவியல் திணைக்களத்தின் வானிலை அதிகாரி மொஹமட் சாலிஹின் தெரிவித்தார்.

இதேவேளை யாழ்ப்பாண மாவட்டத்தில் சகல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள் ளப்பட்டுள்ளதாக அந்த மாவட்ட அரசாங்க அதிபர் கணபதி பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துரைத்த போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அத்துடன் கிளிநொச்சி மாவட்டத்திலும் முன் னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் ரூபாவதி கேதீஸ்வரன் எமது செய்தி பிரிவுக்கு தெரிவித்தார்.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள சகல மக்களுக்கும் இது தொடர்பில் தகவல் வழங்கப் பட்டுள்ளதோடு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தற்காலிக தங்குமிட வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் தெரிவித்தார்.

மேலும் வளிமண்டலவியல் திணைக்களம் வழங்கிய தகவலுக்கமைய முன்னேற்ற கூட்டம் ஒன்று நடத்தப்பட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் நந்தினி ஸ்டென்லி டி மெல் தெரிவித்தார்.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலாளர்களுக்கும் இது தொடர்பில் அறிவிக்கப்பட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் கருணாகரன் குறிப்பிட்டார்.

## புரவியிலிருந்து...

இருக்குமாறும் அவர் பொதுமக்களை கேட் டுக்கொண்டுள்ளார்.

அத்தோடு தேவையேற்படின் தகவல்களை தெரிவிக்க தேவையான கட்டமைப்புக்களின் தொலைபேசி இலக்கங்களை தெரிந்து வைத்துக் கொள்ளுமாறும் அவர் மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும் அனர்த்த நிலைமைகளை கையாள்வதற்கு நாடளாவிய ரீதியில் அனர்த்த முகாமைத்துவக் கட்டமைப்புக்கள் மற்றும் முப்படையினரும் தயாராக இருக்கின்றனர் என்றும் இது தொடர்பாக சம்மந்தப்பட்ட பிரதாணிகளுடன் கலந்துரையாடியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வங்கக் கடலில் ஏற்பட்ட தாழமுக்கம் புரவிப் புயலாக மாற்றமடைந்து குறித்த புயல் திருகோணமலை மற்றும் முல்லைத்தீவு இடைப்பட்ட பிரதேசங்களுக்கு ஊடாக நாட்டை ஊடறுத்துச் செல்லும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

குறிப்பாக இன்று இரவு 7.00 மணி தொடக்கம் இரவு 10.00 மணி வரையான காலப் பகுதியில் நாட்டினுள் நுழையும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன் காரணமாக வடக்கு கிழக்கு பிரதேசத்தில் தொடர்ச்சியான மழையுடன் கூடிய கடுமையான காற்று வீசி வருவதுடன் கடல் நீர் மட்டமும் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யாழ். மாநகர சபையின்...

தோற்கடிக்கப்படுமானால் அவரது பதவி பறிபோகும்.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் மாதாந்த அமர்வு இன்றைய தினம் காலை முதல்வர் இம்மானுவேல் ஆனல்ட் தலைமையில் நடைபெற்றது.

2021ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டம் சபையில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. அதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் ஆதரவு வழங்கினார்கள். அதனால் குறித்த வரவு செலவு திட்டத்திற்கு 19 பேர் ஆதரவாக வாக்களித்தனர்.

ஈழமக்கள் ஜனநாயக கட்சியைச் சேர்ந்த 10 பேர், அகில இலங்கை தமிழ் காங்கிரஸைச் சேர்ந்த 13 பேர் மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ஒருவர் என 24 உறுப்பினர்கள் எதிராக வாக்களித்தனர்.

அதனால் யாழ்ப்பாணம் மாநகர சபையின் வரவு செலவுத்திட்டம் 5 மேலதிக வாக்குகளால் தோற்கடிக் கப்பட்டது.

இதேவேளை, இன்றைய அமர்வில் 2 உறுப்பினர்கள் சமூகமளிக்க வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## வீதியில் உடைத்த...

தீபாவளி நாளில் (14) வடமராட்சி பகுதிக்கு சென்றுள்ளார்.

அங்கிருந்து திரும்பி வரும்போது, வல்லைச் சந்தியில், சமயச்சடங்கிற்காக யாரோ உடைத்த நீர்த்துப் பூசணிக்காயில் மோட்டார் சைக்கிள் சிக்கிய நிலையில், எதிரே வந்த காரில் மோதி விபத்திற்குள்ளானார்.

இதனையடுத்து உடனடியாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

எனினும் சிகிச்சை பலனின்றி குறித்த நபர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளதாக கூறப்படுகின்றது.

## புரவியை எதிர்கொள்ள...

உஷார் நிலையிலுள்ள அதேசமயம், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளுடன் இணைந்து தேவையான சகல நடவடிக்கைகளையும் முன்னெடுக்குமாறு வடக்கு, கிழக்கு மற்றும் வன்னி பிரதேசங்களுக்கு பொறுப்பான பாதுகாப்பு படைகளின் தளபதிகளுக்கு பாதுகாப்பு அமைச்சு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்

புரவி சூறாவளி, கிழக்கு கடற்பகுதி ஊடாக இலங்கையை நோக்கி வரவுள்ளதாக அறிவிக்கப்பட்டதை அடுத்து இதனால் ஏற்படும் பாதிப்புக்களிலிருந்து மக்களை பாதுகாக்கும் பொருட்டு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம அந்தந்த பிரதேசங்களிலுள்ள மாவட்டச் செயலாளர்கள் ஊடாக தேவையான சகல ஏற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளது என்றார்.

## வடக்கு மாகாணத்திலுள்ள...

பாடசாலைகள் ஏற்கனவே மூடப்பட்டுள்ள நிலையில் யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களிலுள்ள பாடசாலைகளுக்கு இரண்டு நாட்கள் விடுமுறை வழங்கப்படவுள்ளது.

மாவட்டச் செயலாளர்களால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக வடக்கு மாகாண ஆளுநரால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

# 11 உயிர்களைக் காவுகொண்ட சிறைச்சாலை மோதல் குறித்து ஆராய மேலுமொரு குழு நியமனம்



மஹர சிறைச்சாலை மோதல் தொடர்பான விசாரணைக்காக குற்றப் புலனாய்வுப் திணைக்களத்தின் 12 அதிகாரிகள் உள்ளடங்கிய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவினால் இந்த குழு நியமிக்கப்பட்டதாக, அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மஹர சிறைச்சாலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் 11 பேர் உயிரிழந்தனர். மேலும் 104 பேர் காயமடைந்து ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

இந்த சம்பவம் தொடர்பாக ஏற்கனவே நீதியமைச்சினாலும் குழு ஒன்று அமைக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

இந்தநிலையில் குற்றப் புலனாய்வுப் திணைக்களத்தின் குழுவொன்றும் தற்போது நியமிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மஹர சிறைச்சாலை பதற்ற நிலை தொடர்பான விசாரணைக்காக நீதியமைச்சினால் நியமிக்கப்பட்ட குழுவில் இருந்து பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அஜித் ரோஹண விலகியதை அடுத்து, அந்த இடத்துக்கு பொலிஸ் அத்தியட்சகர் லலிந்த ரணவீர நியமிக்கப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# சிறைச்சாலைகளில் நெருக்கடியைக் குறைக்கும் திட்டம்

சிறைச்சாலைகளில் நெருக்கடியைக் குறைக்கும் வகையிலான செயற்பாட்டுத் திட்டம் ஒன்றைத் தயாரிக்குமாறு சட்டமா அதிபர் தப்புலே டி லிவேரா, பொலிஸ்மா அதிபர் சீ.டி.விக்ரமரத்னவிற்கு அறிவுறுத்தியுள்ளார்.

அத்துடன், இந்தச் செயற்பாட்டுத் திட்டத்தை எதிர்வரும் திங்கட்கிழமைக்கு முன்னதாக முன்வைக்குமாறு சட்டமா அதிபர் அறிவுறுத்தியுள்ளதாக சட்டமா அதிபரின் இணைப்புச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று பரவல் நிலைமையினால் சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளுக்கு ஆபத்து ஏற்படக்கூடும் என்ற அடிப்படையில், சிறைச்சாலைகளில் கைதிகளின் எண்ணிக்கையைக் குறைக்குமாறு அறிவுறுத்தப்பட்டு வருகிறது.

இதுதொடர்பாக, நடவடிக்கை எடுக்குமாறு சட்டமா அதிபர் ஏற்கனவே பொலிஸ்மா அதிபருக்கு அறிவுறுத்தல்களை விடுத்திருந்த நிலையில், இதுதொடர்பான செயற்பாட்டு அறிக்கையை தயாரிக்குமாறு அறிவுறுத்தியுள்ளார்

# கிழக்கில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 257 ஆக அதிகரிப்பு

கிழக்கு மாகாணத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 257ஆக அதிகரித்துள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் வைத்தியர் அழகையா லதாகரன் தெரிவித்துள்ளார்.

நேற்று(செவ்வாய்கிழமை) அக்கரைப்பற்று பிரதேசத்தில் 32பேரும், அட்டாளைச்சேனையில் 06 பேரும், ஆலையடிவேம்பு பகுதியில் ஒருவரும், வாழைச்சேனை பகுதியில் 04பேரும் கொரோனா தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொதுச்சந்தையுடனும், பேலியகொட மீன்சந்தையுடனும் தொடர்புபட்டவர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்புகொண்டவர்களே அதிகளவில் இனங்காணப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுவரையில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் 138பேர் கொரனா தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளதுடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் 92பேரும் அம்பாறை சுகாதார பிரிவில் 11பேரும் திருகோணமலை மாவட்டத்தில் 16பேரும் கொரோனா தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

அக்கரைப்பற்று பொதுச்சந்தையுடன் தொடர்புபட்ட 109பேர் இதுவரையில் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளதாகவும் மாகாண பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் அக்கரைப்பற்று பொதுச்சந்தையுடன் தொடர்புபட்டவர்கள் தொடர்பான தகவல்களை பொதுசுகாதார பிரிவினருக்கு வழங்குமாறும் கொழும்பு உள்ளிட்ட பிற இடங்களில் இருந்து வருகைதருவோர் தொடர்பிலும் பொதுமக்கள் விழிப்பாக இருந்து சுகாதார மற்றும் பாதுகாப்பு துறையினருக்கு தகவல்களை வழங்கவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# கொரோனோவால் நேற்றும் நால்வர் உயிரிழப்பு!



நாட்டில் மேலும் நால்வர் கொரோனா வைரஸ் தொற்றினால் மரணித்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தியுள்ளார்.

இதன்படி, கொழும்பு-12 பகுதியைச் சேர்ந்த 74 வயதுடைய ஆணொருவர் கடந்த 29ஆம் திகதி உயிரிழந்தார்.

இவரது மரணத்திற்கான காரணம், பக்கவாதம் மற்றும் கொவிட் -19 வைரஸ் தொற்றுடன் ஏற்பட்ட கிருமித் தொற்று எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கொலன்னாவ பகுதியைச் சேர்ந்த 74 வயதுடைய பெண்ணொருவர் கடந்த 29ஆம் திகதி அவரது வீட்டில் உயிரிழந்தார்.

இவருக்கு, மூளைக்குள் இரத்தப் போக்குடன் கொரோனா தொற்று ஏற்பட்டமையே மரணத்திற்கான காரணமாகும்.

மேலும், ராஜகிரியவைச் சேர்ந்த 93 வயதுடைய பெண் கடந்த 28ஆம் திகதி அவரது வீட்டில் உயிரிழந்தார். இவரது இறப்புக்கான காரணம் இரத்தம் விஷமானமை, தோல் தொற்று மற்றும் கொரோனா தொற்று என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கொழும்பு-10 பகுதியைச் சேர்ந்த 81 வயதுடைய ஆணொருவர் தனியார் மருத்துவமனையொன்றில் கொரோனா தொற்று கண்டறியப்பட்டு, முல்லேரியா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

இவர் கடந்த 30ஆம் திகதி மரணித்துள்ள நிலையில், நாட்பட்ட நுரையீரல் தொற்றுடன் கொரோனா தொற்று ஏற்பட்டமையே மரணத்திற்கான காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இலங்கையில் கொரோனா தொற்றினால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 122ஆக அதிகரித்துள்ளது.

# நேற்றும் 500இற்கு மேற்பட்டோருக்கு கொரோனா தொற்று



நாட்டில் நேற்று 541 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இவ்வாறு, தொற்று கண்டறியப்பட்டவர்கள் அனைவரும் ஏற்கனவே தொற்று கண்டறியப்பட்டவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, மினுவாங்கொட மற்றும் பேலியகொட மீன் சந்தை கொரோனா கொத்தணியில் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 20 ஆயிரத்து 983ஆக அதிகரித்துள்ளது.

இந்நிலையில், நாட்டில் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 24 ஆயிரத்து 528ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்து இன்று 257 பேர் வீடுகளுக்குத் திரும்பியுள்ள நிலையில் இது வரை 17 ஆயிரத்து 817 பேர் தொற்றிலிருந்து மீண்டுள்ளனர்.

இந்நிலையில், இன்னும் ஆறாயிரத்து 593 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

# வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு அனுப்பப்பட்ட போதைப் பொருட்கள்

வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு அனுப்பப்பட்ட 80 இலட்சம் ரூபா பெறுமதியான போதைப்பொருட்கள் கொழும்பு மத்திய தபால் பரிமாற்றத்தில் வைத்து சுங்க அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

4 பொதிகளிலில் அடைக்கப்பட்ட நிலையில் அனுப்பப்பட்ட குஷ் மற்றும் கொகேன் ஆகிய போதைப் பொருட்களே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளது.

இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளில் இருந்து குறித்த போதைப்பொருட்கள் அனுப்பப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு, நாவல, வாத்துவ மற்றும் அஹங்கம ஆகிய ஆகிய முகவரிகளுக்கே பொதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.